1978 மார்ச் 11]

நக்ருக்கு வேண்டிய குடிநீரைப் பெறலாம் என கருதப்பட்டது. எனினும், இவ்விடத்திலிருந்து கிடைக்கப்பெறும் நீரின் அளவு, மற்றும் நீரின் தன்மை, இவற்றை அறியும்பொருட்டு முதல் கட்டமாக நீர் ஆதாரத்தை ஏற்படுத்தி சோதனை செய்வதற்கென ரூ. 1.20 லட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு ஒன்று தயாரிக்கப் பட்டது.

கள்ளக்குறிச்சி பேரூராட்சிக்கு மணிமுக்தா நதியிலிருந்து குடிநீர் கொண்டுவரும் ஆய்வுத் திட்டத்தில் சின்னசேலம் பேரூராட்சி இணைக்கப்படவில்லை. இருப்பினும், இவ்விரு ஆய்வுத் திட்டங்களின் முடிவுகளை கருத்திற்கொண்டு, தேவையெனில் ஒருங்கிணைந்த திட்டமொன்று அமைப்பது குறித்த சாத்தியக்கூறுகள் பரிசிலிக்கப்படும்.

சிதம்பரம் நகராட்சியில் நீர்தேக்கத் தொட்டி

*521 வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நகராட்சி, குடிதண்ணீர் பற்றுக்குறையை நீக்க மற்றும் ஒரு நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு அரசிடம் அனுமதி கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு மானியத் தொகை அளிக்கும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை கலியமூர்த்தி : சிதம்பரம் நகராட்சி குடிநீர் பற்றுக்குறை காரணமாக 20 லட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு செய்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளதாக தகவல் தெரிய வருகிறது. அது அரசின் பரிசீலனைக்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சிதம்பரம் நகராட்சி குடிநீர் மேம்பாடுக்கான திட்டம் ஒன்றை கொள்ளிடத்தை ஆதாரமாகக் கொண்டு ரூ.64

லட்சம் மதிப்பீட்டில் தயாரித்தது. இத்திட்டத்தை பராமரிக்க ஆண்டொன்றுக்கு ரூ. 2,40,000 செலவாகும் என்று கணக்கிடப் பட்டது. இதற்கு நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் பின்னர் நிறைவேற்றலாம் என நகராட்சி கருத்து தெரிவித்தது. எனவே தற்போதுள்ளதைக் கொண்டு மாற்றுத் திட்டம் ஒன்றை ரூ. 2 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்துள்ளது. இதற்கு பராமரிப்பு செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 53,000 ஆகும்.

(முற்பகல் 9-40)

திரு. துரை கலியமூர்த்தி: அந்த மாற்றுத் திட்டம் என்பது போர்வெல் அமைத்து நீர் ஏற்றுகின்ற திட்டமா அல்லது வேறு ஏதாவது மாற்றுத் திட்டமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அந்த மாற்றுத் திட்டம் இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

ராதாபுரம் சாலை

*522 வினு—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

நெல்லை மாவட்டம், ராதாபுரம் தொகுதியிலுள்ள ஆத்தன் கரை பள்ளிவாசல்—ராதாபுரம் நெடுஞ்சாலையை தூசு படியாத சாலையாக மாற்றும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஆம்.

திரு. யா. சை. மு. யூசுப்: இந்தத் திட்டம் எப்போது மேற் கொள்ளப்படும் என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இந்த ராதாபுரம் பள்ளி வாசல் சாலையில் முதல் 10.2 கிலோ மீட்டர் சாலை அரசு சாலை யாகவும், 4 கிலோ மீட்டர் பஞ்சாயத்து யூனியன் சாலையாகவும் இருக்கிறது. இதை 4.3 லட்சம் ரூபாய் செலவில் 10.2 கிலோ மீட்டர் சாலையை அரசு எடுத்து இதற்கான பணியை துவங்க இருக்கிறது. மற்றொரு பகுதியான திருவெம்பாலாபுரம் பள்ளி வாசல் சாலை—இந்த 4 கிலோ மீட்டர் சாலையை அரசு மேற்கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.